**தலைப்பு 263 – அம்பாந்தோட்டை மாவட்ட செயலகம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

---

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அம்பாந்தோட்டை மாவட்ட செயலகத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று ஆகியவற்றை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் அம்பாந்தோட்டை மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2019 மே 29 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 24 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்ந்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கமைய உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் **38** ஆம் பிரிவில் குறிப்பிடப்படடுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் தென் மாகாண சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு மாவட்ட செயலகத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) அம்பாந்தோட்டை மாவட்ட செயலகத்தினால் முன்னைய ஆண்டிற்காக நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதன் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால், மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருந்தது என அறிவிக்க முடியாதிருந்தது.

(ஆ) மாவட்ட செயலகத்தினால் முன்னைய ஆண்டிற்கு உரியதாக நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரை

### 1.6.1 நிதிச் செயலாற்றல் கூற்று

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 7(iv) ஆம் பந்தியின் பிரகாரம் நிதிச் செயலாற்றல் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ள எண்ணிக்கைகள் திறைசேரியின் இறுதி நிதிக்கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள | 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்திற்காக பேணிச் செல்லப்படும் பொது வைப்புக் கணக்கின் மீதி ஏசீஏ 4 மாதிரியில் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன், எதிர்வரும் வருடத்தின் கணக்குகளை தயாரிக்கும் போது |

| | | |
|---|---|---|
| எண்ணிக்கைகளுடன் இணங்க வேண்டும். அதற்கமைய திறைசேரியின் இறுதி நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் வைப்புப் பெறுவனவு ரூபா 668,930,412 ஆன போதிலும், நிதிச் செயலாற்றல் கூற்றில் அது ரூபா 669,451,137 ஆக ரூபா 520,725 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | | அதனை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) மேற்படி வைப்புப் பெறுவனவுகள் ஏனைய பெறுவனவுகளாக நிதிச் செயலாற்றல் கூற்றில் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - |

### 1.6.2 நிதி நிலமைக்கூற்று

---------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்புகள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** |
|---|---|---|
| (அ) 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிச் செயலாற்றல் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ள எண்ணிக்கைகள் திறைசேரியின் இறுதி நிதிக்கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள எண்ணிக்கைகளுடன் இணங்க வேண்டும். மாவட்ட செயலகத்திற்குரிய வைப்புக் கணக்கில் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான மீதி ரூபா 298,149,870 ஆன நிதிநிலைமைக் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அது திறைசேரியின் இறுதி நிதிக்கூற்றுக்களில் | அரச கணக்குகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | - |

| | | | |
|---|---|---|---|
| | பிரகாரம்ரூபா 297,167,561 ஆக இருந்தது. | | |
| (ஆ) | அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 7(v) ஆம் பந்தியின் பிரகாரம், தேறிய சொத்துக்கள் கணிப்பிடப்பட வேண்டியதாக இருந்தது. மேற்குறிப்பிடப்பட்ட அவதானிப்பையும் கவனத்திற் கொள்ளும் போது மாவட்ட செயலகத்தின் தேறிய சொத்துக்களின் பெறுமதி ரூபா 92,297,970 ஆக பாதகமான மீதியாக இருந்த போதிலும், அது ரூபா 93,280,279 ஆன பாதகமான மீதியொன்றாக காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - |

**1.6.3 காசுப்பாய்ச்சல் கூற்று**

--------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | <u>**கணக்காய்வு அவதானிப்புகள்**</u> | <u>**பரிந்துரை**</u> | <u>**கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்**</u> |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது அலுவலகத்தினால் ரூபா 575,606,446 ஆன வைப்புக்கள் மீளச் செலுத்தப்பட்டிருந்த போதிலும், செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்டவை காசுப்பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்பட்டிருக்க வில்லை. | 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | - |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது முற்பணப் பெறுவனவுகளாகவும் கொடுப்பனவுகளாகவும் முறையே ரூபா 66,156,983 தொகை ரூபா 121,641,845 ஆன கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அது காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாகிய தேறிய | 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | - |

| | | | |
|---|---|---|---|
| | காசுப்பாய்ச்சலில் காண்பிக்கப்பட்டிருக்க வில்லை. | | |
| (இ) | அலுவலகத்தினால் மீளாய்வாண்டின் போது நிதி நடவடிக்கைகளில் ஈடுபட்டிராத போதிலும், காசுப்பாய்ச்சல் கூற்றில் நிதிச் செயற்பாடுகளுக்காக செலவிடப்பட்ட காசுப்பாய்ச்சலின் கீழ் ரூபா 697,248,291 தொகை காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - |

### 1.6.4 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை

மாவட்ட செயலகத்தினால் கீழேஅ காண்பிக்கப்பட்டுள்ள சில பதிவேடுகள் பேணப்பட்டிராததுடன், சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை என்பது தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | **நட்டங்கள் தொடர்பான பதிவேடு** | | |
| | நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பான பதிவேடு முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 110 இன் ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை | எதிர்காலத்தில் நாளதுவரையாக பேணிச் செல்ல நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (ஆ) | **மின்சார உபகரணங்கள் தொடர்பான பதிவேடு** | | |
| | மின்சார உபகரணங்கள் தொடர்பான பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 454(2) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை | எதிர்காலத்தில் நாளதுவரையாக பேணிச் செல்ல நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (இ) | **கடமைத் தொலைபேசி பதிவேடு** | | |
| | நிதிப்பிரமாணம் 845(1) இன் பிரகாரம் கடமைத் தொலைபேசி பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 845(1) இன் பிரகாரம் 26 ஆம் பிரிவின் பிரகாரம் கடமைத் தொலைபேசி பதிவேடொன்று பேணப்பட வேண்டும். | எதிர்காலத்தில் நாளதுவரையாக பேணிச் செல்ல நடவடிக்கை எடுக்கின்றேன். |

**(ஈ) வாகன நிரப்படுத்தும் பதிவேடு**

| | | |
|---|---|---|
| வாகன நிரப்படுத்தல் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 1647(உ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் நாளதுவரையாக பேணிச் செல்ல நடவடிக்கை எடுக்கின்றேன். |

### 1.6.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள்

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவை** | | | |
| XII அத்தியாயத்தின் 1.9 ஆம் பிரிவு | ஒக்கோவெல பிரதேச செயலகத்திறகு இடமாற்றம் பெற்று வந்த சில உத்தியோகத்தர்கள் முதலாவது நியமனத் திகதி முதல் பெற்றுள்ள வருடாந்த விருப்புக்கள் தொடர்பான விபரங்களை முன்னைய சேவை நிலையத்திலிருந்து வருவித்து விடுமுறைப் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிருக்க வில்லை. | தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை | உத்தியோகத்தர்கள் இடமாற்றம் பெற்று வருகை தரும் போது விடுமுறை தொடர்பான விபரங்கள் கிடைப்பதில்லை என்பதுடன், அவை தனிப்பட்ட கோவைகளுடன் அதன் பின்னர் கிடைக்கும் சந்தர்ப்பங்கள் உள்ளன. |
| **(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை** | | | |
| நிதிப்பிரமாணம் 103 மற்றும் 104 | அம்பலந்தோட்டை பிரதேச செயலகத்திற்குரிய கெப் வண்டியொன்று 2016 சனவரி 16 ஆந் திகதி விபத்திற்கு | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நி.பி 104(4) இன் பிரகாரம் விசாரணை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக எதிர்காலத்தில் உரிய முறையில் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | உள்ளாகியிருந்த போதிலும், அது தொடர்பில் எவ்வித நடவடிக்கையும் 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் எடுக்கப்பட்டிருக்க வில்லை. | | விசாரணைக் குழுவொன்று நியமிக்கப்பட்டு நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் எடுக்கவேண்டிய மேலதிக நடவடிக்கைகளை எடுத்து கணக்காய்விற்கு அறிக்கையிடுகின்றேன். |
| **(இ)** | **அரச நிர்வாகச் சுற்றறிக்கை**<br>------------------------- | | | |
| (i) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தி | 2018 ஆம் ஆண்டின் போது 02 பிரதேச செயலகங்களுக்குரிய 4 அரச வாகனங்களில் எரிவுக்குள்ளாகும் எரிபொருள் தொடர்பான பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்வரும் காலங்களில் உரிய முறையில் எரிபொருள் எரிவுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டுமென, எனது இலக்கம் DSH/ACC/02 மற்றும் 2019.01.25 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ii) | 2013 யூலை 05 ஆந் திகதிய HAF-03-ADMIN-02-002 ஆம் இலக்க சுற்றறிக்கையின் கடிதத்தின் 04 மற்றும் 05 ஆம் பந்திகள் | அனைத்து கிராம உத்தியோகத்தராலும் 02 வாரத்திற்கு ஒரு தடவை பிரிவில் அத்துமீறிய காணி பற்றுதல்கள் / நிர்மாணங்கள் தொடர்பில் அறிக்கையொன்று பிரதேச செயலாளருக்கு சமர்ப்பிக்க வேண்டிய போதிலும், அதற்கமைய செயற்பட்டிராத சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உரிய முறையில் இரு வார அறிக்கையினை பெற்றுக்கொள்ள எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| **குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கங்களினூடாக பெற்றுக்கொண்டநிதியேற்பாடுகளை சேமித்தல்** | | |
| 2017 ஆம் ஆண்டின் போது இடம்பெற்ற வெள்ளம் காரணமாக இன்னல்களுக்கு உள்ளாகிய பிரதேசங்களின் புனரமைப்பு நடவடிக்கைகளுக்காக குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கங்களின் கீழ் ரூபா 208,810,000 ஆன நிதியேற்பாடுகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தன. 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அவற்றுள் ரூபா 34,117,297 தொகை அல்லது நிதியேற்பாட்டின் 16 சதவீதமான அளவானது பயன்படுத்தக்கூடாது எஞ்சியிருந்தது. | தேவைப்பாட்டினை கருத்திற் கொண்டு பணிகளுக்கு தேவையான போதியளவான நிதியேற்பாடுகளை மாத்திரம் ஏற்பாடு செய்ய வேண்டியமை. | ஒப்பந்தக்காரர்களின் பட்டியல்களுக்கமைய மதிப்பீடு செய்யப்பட்ட போதிலும், வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பரிந்துரைகளின் அடிப்படையில் கொடுப்பனவு மேற்கொள்ளும் போது பட்டியல்களின் பெறுமதி குறைவடைதலும் தேசிய காப்பீட்டு நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையினால் நட்டஈடு வழங்கப்பட்டமையால் மதிப்பீட்டு பெறுமதி செலவிடப்படாமையாலும் நிதியேற்பாடுகள் எஞ்சியுள்ளன. |

### 2.2 ஏனைய அமைச்சுகள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதியேற்பாடுகளின் பயன்பாடு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) விளையாட்டு அமைச்சினூடாக 2017 ஆம் ஆண்டின் போது ருஹுணு மாகம்புர நிர்வாக கட்டிட வளாகத்தில் நடைமுறைப்படுத்தப்படும் நடை பாதையை நிர்மாணிக்கும் | செயற் திட்டத்தை திட்டமிடும் போது முன் ஆய்வின் பின்னர் அனைத்து பணிகளையும் உள்ளடக்கி மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டியமை. | செயற்திட்டத்தை திட்டமிடும் போது சிக்கல்கள் உள்ளமை செயற்திட்டத்தை மேற்கொள்ளும் போது புரிந்துகொள்ளக் கூடியதாக இருந்தது. இவ்வாறான நிர்மாணமொன்றில் முதலாவது சந்தர்ப்ப் இது என்றமை இதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | செயற்திட்டத்திற்காக 10 வேலை விடயங்களுக்காக ரூபா 2,113,447 மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. பட்டியல்களின் பரிசோதனையின் போது மதிப்பிடப்பட்ட பணிகளுக்காக ரூபா 751,601 தொகையும், மேலதிக வேலைக்காக ரூபா 273,258 தொகையும், மேலதிக பணிகளுக்காக ரூபா 1,015,468 தொகையுமாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அதற்கமைய மதிப்பிடப்பட்ட பணிகளின் பெறுமதியில் 61 சதவீதமான அளவிற்கு மேலதிகமாக மற்றும் மேலதிக பணிகளாக செலுத்தப்பட்டிருந்தது. மேலும், இந்த செயற்திட்டம் நிறைவு செய்யப்பட்ட திகதி முதல் 2019 மே மாத் வரையிலம் செயற்திட்டத்திலிருந்து எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் நிறைவேறும் வகையில் பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை. | | பிரதானமான காரணமாகும். மேலதிக வேலைகள் மற்றும் உதிரி வேலைகளுக்காக அங்கீகாரத்தினை பெறப்பட்டுள்ளது. அதனூடாக எதிர்பார்த்த பெறுபேறுகள் இது வரையிலும் முழுமையாக அடைவதற்கு முடியாத போதிலும், எதிர்வரும் காலங்களில் அதனை மேம்படுத்தவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டவாறு உள்ளது. |
| (ஆ) | 2017 ஆம் ஆண்டின் போது உட்கட்டமைப்பு உறுதிகளை அபிவிருத்தி செய்யும் விசேட நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கரமெட்டிய அம்பஹாஹேன ஊடாக கொன்கல்தென்ன வீதிக்கு சம்பளமிடும் போது பெற்றுக்கொள்ளப்பட்ட தவறான அளவீடுகளை அடிப்படையாகக் கொண்டு கொங்கிறீட் இற்காக ரூபா 43,446 தொகையும், அஸ்பலட் இற்காக ரூபா 358,286 தொகையும், அஸ்பெலட் இடுவதற்காக மற்றும் செப்பனிடுவதற்காக ரூபா 49,860 தொகையும், ABC கலவையை விநியோகிப்பதற்காக ரூபா 979,600 தொகையும், ABC | நிர்மாணங்களுக்கு உரியதாக சரியான அளவீடுகளை பெற்றுக் கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பூர்த்தி செய்யப்பட்ட பணிகளுக்காக மாத்திரம் கொடுப்பனவு மேற்கொள்ள வேண்டியமை. | • குறுக்கு தூணின் இருபுறமும் 4.9 மீட்டர்கள் அளவான பகுதியிலுள்ள நிலைமை கருத்திற் கொண்டு அஸ்பலட் இற்கு பதிலாக கொங்கிறீட் இழையப்பட்டுள்ளதுடன் அதற்கான செலவினம் ரூபா 59,880 இது வரையிலும் செலுத்தப்படவில்லை.<br><br>• அஸ்பலட் இற்காக கொடுப்பனவு மேற்கொள்ளும் போது வேலைத்தளத்திற்கு விநியோகிக்கப்பட்ட அஸ்பலட்டின் அளவிற்கமைய 1907.12 கன அடிகள் இற்காக |

| | | | |
|---|---|---|---|
| | கலவையை இடுவதற்காகவும் செப்பனிடுவதற்காகவும் ரூபா 349,860 தொகையுமாக ரூபா 1,781,052 தொகையும் கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. | | கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.<br><br>• முன்னைய காலத்தில் இழையப்பட்ட கொங்கிறீட் தட்டு இருபுறமும் உயர்வடைந்து நடுப்பகுதி தாழிறங்கியிருந்ததுடன், இரு புறத்தையும் சீராக்குவதற்காக அஸ்பலட் இடுவதற்கு நேர்ந்துள்ளது.<br><br>• ABC இடுவதற்காக கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் போது தொழில்நுட்ப உத்தியோகத்தரின் காசுப் புத்தகத்தின் பிரகாரம் மத்தியப் பெறுமதியான 212 mm இடுவதற்காக கொடுப்பனவு மேற்கொள்ளப் பட்டுள்ளதுடன் கூடுதலாக கொடுப்பனவொன்று இடம்பெற்றிருக்கவில்லை. |
| (இ) | மேற்குறிப்பிடப்பட்ட செயற் திட்டத்தில் வீதியின் இருபுறமும் கொங்கிறீட் காண்கள் மற்றும் கொங்கிறீட் பக்கச்சுவர்களை நிர்மாணிப்பதற்காக கொங்கிறீட் இடுவதற்காக ரூபா 916,200 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன், பலகையிலமைத்த கடைசலிற்காக ரூபா 1,264,716 தொகை செலவிடப்பட்டிருந்தது. அதற்கமைய பலகை கடைசல்களுக்காக கொங்கிறீட்டினை விட அதிகமான செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. மேலும் 2018 ஆகஸ்ட் 13 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது கொங்கிறீட் காண்கள் மற்றும் பக்கச் சுவர்களுக்காக பலகை | செயற்திட்டம் தொடர்பில் போதியளவான கற்கை யொன்றினை மேற்கொண்டு செயற்திட்டத்தின் தன்மையின் பிரகாரம் நிறைவேற்றப்பட வேண்டிய வேலை விடயங்கள் உள்ளடக்கி மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டியதுடன், நிறைவேற்றிய பணிகளுக்காக மாத்திரம் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட வேண்டியமை. | 12 கன மீட்டர்கள் அளவான அளவிற்காக கூடுதலாக செலுத்தப்பட்டிருந்ததுடன், அந்த தொகையினை பிடிகாசிலிருந்து குறைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. |

கடைச்சலகள் தேவையற்ற இடமொன்றிற்காக பலகை கடைச்சல்கள் இடப்பட்டதாக கணக்கிடப்பட்டு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மாவட்ட அபிவிருத்தி திட்டத்தின் பிரகாரம் மாவட்ட விவசாய பணிப்பாளர் அலுவலகத்தினூடாக 2018 ஆம் ஆண்டின் போது நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டிருந்த ரூபா 3.46 மில்லியனான 05 செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு தவறியிருந்தது. அதற்காக மாவட்ட அபிவிருத்தி திட்டத்திற்கு உள்ளடக்கப்படாத ரூபா 10.55 மில்லியனான 06 வெளிவாரி செயற்திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்படடிருந்தன. | வருடாந்த அபிவிருத்தி திட்டத்தினூடாக நடைமுறைப் படுத்துவதற்கு திட்டமிடப்பட்ட முன்மொழிவு களுக்காக நிதியேற்பாடுகளை மேற்கொண்டு ஆண்டினுள் நடைமுறைப் படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை | செயற்திட்ட முன்மொழிவுகளை இனங்கண்டு அதற்கான நிதியேற்பாடு கிடைக்குமென எதிர்பார்த்து அதற்கு முன்மொழிவுகள் வருடாந்த அபிவிருத்தி திட்டத்தில் உள்ளடக்கப்பட்டது. எனினும், இந்த செயற்திட்ட முன்மொழிவுகளுக்காக உரிய அமைச்சினால் நிதியேற்பாடுகளை வழங்கப்படாதவிடத்து, அந்த செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்த முடியாது போயிருந்தது. அதற்குப் பதிலாக அமைச்சினால் ஏனைய முன்மொழிவுகளுக்காக நிதியேற்பாடுகள் வழங்கப்படுமிடத்து வருடாந்த அபிவிருத்தி திட்டத்திற்கமைய செயற்படல் முடியாததாகும். |
| (ஆ) | தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை மற்றும் கணனிப் பயிற்சி பிரிவினூடாக முறையே நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த 11 செயற்திட்டங்களில் 07 செயற்திட்டங்கள் மற்றும் 26 செயற்திட்டங்களில் 20 இனை நடைமுறைப்படுத்த தவறியிருந்தது. அதற்கு பதிலாக தேசிய சிறுவர் | வருடாந்த அபிவிருத்தி திட்டத்தினூடாக நடைமுறைப் படுத்துவதற்கு திட்டமிடப்பட்ட பணிகள் ஆண்டினுள் நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அமைச்சினால் வழங்கப்பட்ட நிதியேற்பாடுகளின் அடிப்படையில் ஆரம்ப திட்டத்தில் உள்ளடக்கப்படாத புதிய கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களை பயிற்றுவித்தல் போன்ற நிகழ்ச்சித்திட்டங்கள் மாவட்ட கணனி பயிற்சி பிரிவில் நடைமுறைப்படுத்த |

| | | |
|---|---|---|
| பாதுகாப்பு அதிகாரசபையினால் மாவட்ட அபிவிருத்தி திட்டத்தில் உள்ளடக்கப்படாத 03 செயற்திட்டங்கள் மற்றும் கணனி பயிற்சி அலகுகளினூடாக அபிவிருத்தி திட்டத்தில் உள்ளடக்கப்படடாத 07 செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தப்பட்டு இருந்ததாகவும் 2018 ஆம் ஆண்டிற்கான செயலாற்றல் அறிக்கையில் வெளிப்படுத்தப்பட்டது. | | நேர்ந்துள்ளது. |

## 3.2 செயற்பணிகள் நிறைவேற்றப்படாமை

-------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாவட்ட செயலகத்தினால் 10 செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தவதற்காக பெலிஅதர பிரதேச செயலகத்திற்கு 2018 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்த ரூபா 7,100,000 தொகையான நிதியேற்பாட்டில் 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் எவ்வித செயன்முன்னேற்றமும் அடையப்பெற்றிருக்கவில்லை. | ஏற்பாடு செய்யப்பட்ட நிதியேற்பாடுகளை பயனுள்ள விதத்தில் அபிவிருத்தி பணிகளில் ஈடுபடுத்த வேண்டியமை. | அமைச்சினால் கணக்காண்டின் இறுதியில் நிதியேற்பாடுகளை வழங்குதலும், அதற்கமைய பெறுகை நடவடிக்கைகளை மேற்கொண்டு பணிகளை நிறைவு செய்ய போதியளவான காலம் கிடைக்காமையும், குளங்கள், அணைக்கட்டுக்களை புனரமைக்கும் செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் சந்தர்ப்பத்தில் அதிக மழை காரணமாக தடைகள் ஏற்பட்டிருந்தமை போன்ற காரணங்களின் அடிப்படையில் உரிய செயற்திட்டங்களை நிறைவேற்ற முடியாதிருந்தது. |

### 3.3 எதிர்பார்க்கப்பட்ட அடைவு மட்டத்தினை அடையப்பட்டிராமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| திஸ்ஸமஹராம பிரதேச செயலகப் பிரிவின் வீதியொன்றில் அச்சுக் கற்களை பதித்தல் செயற்திட்டமொன்றிற்காக ரூபா 3,535,000 ஆன நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதற்காக ரூபா 2,425,452 தொகை செலவிடப்பட்டிருந்தது. அந்த நிர்மாணங்களுக்காக பயன்படுத்தப்பட்ட அச்சுக் கற்களில் எதிர்பார்க்கப்பட்ட சக்தி மட்டங்களை பரீட்சிப்பதற்காக ஈடுபடுத்தப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது எதிர்பார்க்கப்பட்ட சக்தி மட்டமானது 46 சதவீதத்தை அண்மித்திருக்கவில்லை. | வீதிகளை நிர்மாணிக்கும் போது மதிப்பீட்டில் குறிப்பிடப் பட்டுள்ளவாறு உரிய தரமுடனான பொருட்களை பயன்படுத்தி நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியமை. | கணக்காய்வு அவதானிப்புகளுடாக சுட்டிக் காண்பிக்கப்பட்டிருந்த இடங்களில் தற்போது பதிக்கப்பட்டுள்ள அச்சுக் கற்களை கழற்றி அகற்றி உரிய நியமத்துடனான அச்சுக்கற்கனை பதித்து வீதியினை ஒழுங்கமைக்குமாறும், அவ்வாறு இழைக்கப்படும் அச்சுக் கற்களை மீளப் பரிசோதனைக்கு உட்படுத்தி அதன் பெறுபேறுகளை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுப்பதாகவும், உரிய ஒப்பந்ததாரருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு கைத்தொழில்களுக்கு கொடுப்பனவு நிறுத்தப்பட்டுள்ளதுடன், உரிய திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு கணக்காய்விற்கு அறிவிக்கின்றேன். |

### 3.4 எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் (Outcome) பெறப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) கிராம சக்தி மக்கள் திட்டத்தினூடாக சிறு குழுக்கள் உருவாக்கி கிராமிய சேமிப்பினை பலப்படுத்தி சங்கமொன்றை உருவாக்கும் நோக்கம் காணப்பட்ட போதிலும், 2019 | செயற்திட்டத்தின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | முதலாம் கட்டத்தில் கிராம சக்தி சங்கங்கள் பலவற்றினால் இதுவரையிலும் சிறுகுழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. |

| | | |
|---|---|---|
| சனவரி 31 ஆந் திகதி வரையிலும் ஹம்பாந்தோட்டை மற்றும் தங்கல்ல ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் ஊரிய நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) கிராம சக்தி மக்கள் திட்டத்தின் கீழ் 12 பிரதேச செயலகப் பிரிவுகளின் 36 கிராம சக்தி மக்கள் சங்கங்களுக்காக 2018 செப்தெம்பர் 04 ஆந் திகதி வழங்கப்பட்ட ரூபா 36 மில்லியனில் ரூபா 29.6 மில்லியன் தொகை கணக்காய்வு திகதியான 2019 சனவரி 31 ஆந் திகதி வரையிலும் கிராம சக்தி சங்கங்களால் இனங்காணப்பட்ட அபிவிருத்தி பணிகளுக்காக செலவிடப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்தின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | 2018 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் இந்த சங்கங்கள் பதிவு செய்யப்படுவதுடன், அதற்கமைய அந்த சங்கங்கள் இன்னும் முதலாவது கட்டத்தில் பணிகள் இடம்பெறுவதால், அந்த சங்கங்களுக்காக வழங்கப்படும் மூலதன பண முதலீட்டிற்கு உரிய நடைமுறையொன்று மற்றும் பொருத்தமான ஆவணங்களை வழங்குதல் பொருத்தமான ஆவணங்களை வழங்குதல் இடம்பெற்றிருக்கவில்லை. அதனால் சங்கங்களின் நிதியங்கள் இன்னும் சங்கங்களின் வைப்புக்களாக காணப்படுகின்றன. |

**3.5 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) அங்குணகொலபொலஸ்ஸ பிரதேச செயலகத்தின் பழைய அலுவலக கட்டிடத்தினை அகற்றி அந்த இடத்தில் புதிய அலுவலக கட்டிடத்தினை நிர்மாணிப்பதற்காக 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பொறியியல் சேவைகள் தனியார் கம்பனியொன்றிற்கு ரூபா 12,796,000 செலுத்தப்பட்டிருந்தது. அந்த கொடுப்பனவின் பின்னர் 05 மாதங்களுக்கு மேற்பட்ட | உரிய உடன்படிக்கை கால எல்லையினுள் செயற்திட்டத்தை நிறைவு செய்வதற்கு உடன்படிக்கை கைச்சாத்திட்டவுடன் நிர்மாணப் பணிகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | அடிக்கல் நட்டு பணிகளை ஆரம்பிப்பதற்காக நாளினைப் பெற்றுக்கொள்ளல் தொடர்பில் உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிற்கு பல்வேறு சந்தர்ப்பங்களில் எழுத்து மூலம் மற்றும் வாய்மொழிமூலம் அறிவிக்கப்பட்டுள்ள |

| | | |
|---|---|---|
| காலம் கடட்டந்திருந்த போதிலும், 2019 மே 10 ஆந் திகதி வரையிலும் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | போதிலும், இது வரையிலும் அதற்கு நாட்கள் வழங்கப்படாமையின் காரணத்தால் தாமதம் ஏற்பட்டுள்ளது. |
| (ஆ) அம்பாந்தோட்டை மாவட்ட செயலகத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 16,451,106 தொகையான சிப்பிக்குளம் ஜூம்மா பள்ளி வீதிக்கு கம்பளமிடும் செயற்திட்டம் 2018 ஒக்தோபர் 05 ஆந் திகதி நிறைவு செய்யப்பட வேண்டிய போதிலும், 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அதன் பணிகள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. அத்திகதி வரையிலும் அதன் பணிகள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. அத்திகதி வரையிலும் ஒப்பந்தக்காரருக்கு ரூபா 3,486,359 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | உரிய உடன்படிக்கை காலப்பகுதியினுள் செயற்திட்டத்தை நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | தொடர்ந்தும் பணியை தயாரித்தல் தொடர்பில் உரிய ஒப்பந்தக்காரர் பல்வேறு சந்தர்ப்பங்களில் அறிவிக்கப்பட்டுள்ளது. இது வரையிலும் வீதி கம்பளமிடப்பட்ட போதிலும், பணிகள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை ஒப்பந்தக்காரர் தொடர்பில் CIDA நிறுவனத்தை ஆரம்பிப்பதற்கும், தாமதக் கட்டணங்களை அறவிட்டு எஞ்சிய கொடுப்பனவுகளை மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

## 3.6 நிதி விடுவிக்கப்பட்டிருந்த போதும் முன்னேற்றத்தைப் பெறாதிருந்த செயற்திட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள . | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சனாதிபதி செயலகத்தின் நிதியேற்பாடுகளின் கீழ் 2017 திசெம்பர் 30 ஆந் திகதி தங்கல்ல பிரதேச செயலகத்தினால் அம்பாந்தோட்டை சிரேஷ்ட அளவையாளர்கள் அதிகாரசபைக்கு அண்மியதாக களப்பு எல்லையினை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 1,625,511 தொகை செலுத்தப்பட்டிருந்தது. பணம் செலுத்தி ஒரு வருட காலம் கடடந்திருந்த போதிலும், 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் குறித்த | அரசிற்கு சொந்தமான பணத்தை செலவிட்ட பணி உரிய முறையில் துரிதமாக நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | அரச காணிகளை தீர்ப்பனவு செய்வதற்காக அளவீடுகளை தயாரிக்கும் ஒரே நிறுவனம் நில அளவையாளர் நாயகம் திணைக்களமானமையும், அந்த நிறுவனத்தினால் முழுமையாக பணம் செலுத்தும் வரையிலும் அளவீட்டு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படாமையால், முழுத் தொகையும் செலுத்தப்பட்டுள்ளது. சிரேஷ்ட நில அளவையாளருடன் கலந்துரையாடப்பட்ட பின் இன்றளவில் அளவீட்டு பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எனினும், இது வரையிலும் வரைபடம் கிடைத்திருக்கவில்லை. |

பணி நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை.

**3.7 ஏனைய அவதானிப்புக்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | தங்கல்ல பிரதேச செயலகப் பிரிவிற்குரிய ரீனிமோதர கிழக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவின் கலுகல்ஆர பெறுவனவு லொட் இலக்க் 01 கொண்ட காணியில் கருங்கற்களை அகழ்வதற்காக அனுமதிப்பத்திரங்கள் வெளியிடப்பட்டிருந்தன. கருங்கல் வியாபாரத்தினை மேற்கொள்ளும் போது அதனோடு இணைந்ததாக அமைந்துள்ள அரசிற்கு சொந்தமான கல்பல காணி அத்துமீறிய பயன்பாட்டிற்கு உட்படுத்தப்பட்டிருந்தது. | அரச காணிகள் எல்லைகள் நிச்சயப்படுத்தப்பட்டு வரைபடங்களை தயாரித்து ஆதனங்களை பாதுகாப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | அரசுக்கு சொந்தமான காணிகளின் எல்லைகளை நிச்சயப்படுத்தி இனங்காண முடியாமையால், இது தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுப்பதிலான சிக்கல்கள் எழுந்துள்ளது. காணி அளவீட்டு பணிகளுக்கான கோரிக்கையொன்று சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகருக்கு அனுப்பப்பட்டுள்ளது. காணிகளை அளவிட்டு வரைபடங்கள் கிடைத்த பின்னர் மேலதிக நடவடிக்கைகள் எடுக்கின்றேன். |
| (ஆ) | கிரந்த ஊரனிய பிரதேசத்தில் கடலில் மூழ்கியிருந்த ரூவ்ஹெர'' எனும் பெயருடைய கப்பலின் சிதைவுகளை அகற்றும் பணி 2010 ஆம் ஆண்டின் போது மீன்படி கூட்டுறவு சங்கமொன்றிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. அதற்காக அந்த சங்கத்தினால் மாவட்ட செயலகத்தில் வைப்புச் செய்யப்பட்ட ரூபா 3,500,000 ஆன வைப்புத் தொகை 2018 திசெம்பர் 31 ஆந் திகதி மீளச் செலுத்தப்பட்டிருந்த போதிலும், அந்தக் கொடுப்பனவின் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன. | நிதிப்பிரமாணத்தின் ஏற்பாடுகளுக்கமய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | |
| (i) | வைப்புப் பணங்களை மீளச் செலுத்தும் போது பணம் வைப்புச் சீட்டுக்கள் இரண்டின் | | வைப்பாளர்களால் புகைப்படப் பிரதிகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் |

| | | |
|---|---|---|
| | மூலப் பிரதிகள் கொடுப்பனவு உறுதிச் சீட்டுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | எமது புத்தகங்களில் நிலவும் பற்றுச்சீட்டின் தொடர் இலக்கங்களுடன் பரிசோதிக்கப்பட்டு சரியான தன்மையை உறுதி செய்யப்பட்டது. |
| (ii) | ஒப்பந்தக்காரர் தெரிவு செய்யப்பட்ட அடிப்படை தொடர்பில் தகவல்கள் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை | கடற்படை, மீன்பிடி மற்றும் நீரியல்வள வளங்களின் திணைக்களம், தொல்பொருளியல் திணைக்களம், துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் அமைச்சின் வாணிப கப்பல்கள் பிரிவு, சமுத்திர மாசடைதலை தடுக்கும் அதிகாரசபை ஆகிய நிறுவனங்களின் மதியுரை மற்றும் இணக்கப்பாட்டின் அடிப்படையில் உரிய சங்கத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. |
| (iii) | ஒப்பந்தத்தினை கையளிக்கும் போது இரு தரப்பினரிடையே முறையான நிபந்தனைகளுடனான உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்ப ட்டிருக்கவில்லை | இவ்வாறானதொரு பணி தொடர்பில் அனுபவம் இல்லாதிருந்தமையின் அடிப்படையில் நிபந்தனைகளுடனான கடிதமொன்றினூடாக குறித்த சங்கத்திற்கு கையளிக்கப்பட்டுள்ளதுடன், அதற்கு துறைமுகங்கள் மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சின் மற்றும் அரச நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. |
| (iv) | ஒப்பந்தக்காரர் பணியினை நிறைவு செய்யாது அதிலிருந்து விலகியுள்ள போது வைப்புப் பணம் மீளச் செலுத்தப்பட்டிருந்தது. | இன்றளவில் எஞ்சிய பகுதியை அகற்ற முடியாதுள்ளது. |
| (v) | கப்பலிலிருந்து அகற்றப்படும் கழிவின் அளவு எவ்வளவு என்பது அறிக்கையிடப்பட்டிராயையால், அரச வருமானத்திற்கு அறவிடப்பட வேண்டிய அனைத்து பணமும் | அகற்றப்பட்ட கழிவுகளின் அளவானது கிராம உத்தியோகத்தர் மற்றும் சமுத்திர சுற்றாடல் அதிகாரசபையின் மேற்பார்வையின் அடிப்படையில் அறிக்கை |

| | | |
|---|---|---|
| அறவிடப்பட்டமைக்கான சான்றுகள் காணப்படவில்லை. | | பெறப்பட்டுள்ளது. அவற்றை நிறையிட்டு அதற்கு சுங்க வரி செலுத்திய பின்னர் மாத்திரம் அகற்றுவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. |

## 3.8 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| வருடாந்த செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் 4 பிரிவுகளினால் 11 பணிகள் தொடர்பில் இலக்குகளை அடைவதற்கான சதவீதம் 4 முதல் 77 சதவீதம் வரையான வீச்சிலான குறைவான சதவீதத்தினை பெற்றிருந்தது. | எதிர்பார்க்கப்பட்ட செயலாற்றல் இலக்குகளை அடைவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | சமூக சேவைகள் திணைக்களத்தினால் சிறுநீரக உதவிகளை வழங்கும் செயற்திட்டத்திற்காக உதவிகள் பெறவேண்டிய நோயாளர்கள் பரிந்துரை செய்யப்படாமை மற்றும் சிறுநீரக உதவிகள் தவிர்ந்த ஏனைய உதவிகளை வழங்குவதற்குரிய நிதியேற்பாடுகள் கிடைக்காமை,<br><br>தொழிற்சார் வழிகாட்டிகள் மற்றும் மற்றும் மனிதவளப் பிரிவினால் பதிவு செய்தல் மற்றும் சேவைகளுக்கான நலனாளிகள் முன்வராமை,<br><br>சிறு முயற்சிகள் அபிவிருத்திப் பிரிவின் பணிகள் தொடர்பில் அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் தொழில்நுட்ப மற்றம் மதியுரைகளை பெற்றுக்கொள்வதற்கு நலனாளிகளின் கோரிக்கைகள் முன்வைக்கப்படாமை எனும் விடயங்களின் |

| | | |
|---|---|---|
| | | காரணமாக அந்த பிரிவுகளின் செயலாற்றல் குறைவடைந்துள்ளது.<br><br>விவசாய அமைச்சின் பயிர்ச்செய்கை கிணறுகளுக்கான நிதியேற்பாடுகள் நலனாளிகளின் பட்டியல் ஆண்டின் இறுதியில் வழங்கப்பட்டமையும், அந்த சந்தர்ப்பத்தில் காணப்பட்ட மழை வற்றும் காலம் போதுமானதாக இல்லாதிருந்தமையால் குறித்த செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்த முடியாதிருந்தது |

## 3.9 நட்டங்கள் மற்றும் இழப்புக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 1987 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையான காலமாக 28 சந்தர்ப்பங்களுக்குரிய ரூபா 9,659,649 கூட்டுத்தொகையான நட்டங்கள் மற்றும் சேதங்கள் நிலவின. மீளாய்வாண்டின் இறுதியில் அந்த நட்டம் மற்றும் சேதங்களை அறவிடுவதற்கு அல்து புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கு தவறியிருந்தது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ரூபா 250,000 இற்கு குறைவான நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பில் 05 நிகழ்வுகள் 1987 ஆம் ஆண்டில் காணப்பட்ட கலவரங்களின் போது இடம்பெற்றுள்ளது. அதற்குரிய பதிவேடுகள் தொலைந்து போயுள்ளமையால், அது தொடர்பிலான ஆராய்வதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.<br><br>ரூபா 250,000 இனை விட அதிகமான நட்டங்கள் மற்றும் சேதங்களில் 1987 கலவரங்களின் போது நிகழ்வுக்குரிய கோவையொன்று தொடர்பில் நிதிப்பிரமாணம் 104(4) இன் கீழ் விசாரணை பணிகள் மேற்கொள்ளப்பட்டவாறு உள்ளன. அதற்குரிய பதிவேடுகள் தொலைந்து போயுள்ளமையால் அது |

| | | | |
|---|---|---|---|
| | | | தொடர்பில் தேடிப்பார்ப்பதற்கான குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.<br><br>ஏனைய அனைத்து ஆவணங்கள் தொடர்பிலும் இன்றளவில் மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 2,544,082 கூட்டுப் பெறுமதியான அழிவு நட்டங்கள் தொடர்பிலான தகவல்கள் உள்ளடக்கப்பட்ட 14 கோவைகள் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்க வில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு தேவையான தகவல்கள் உள்ளடக்கப்பட்ட கோவைகள் நாளதுவரையாக பேணிச் செல்ல வேண்டியமை. | 04 கோவைகள் நி.பி 104(4) விசாரணைகளுக்காக ஒப்படைக்கப்பட்டு அந்த விசாரணை நிறைவடைந்த பின்னர் தற்போது மீள ஒப்படைக்கப்பட்டுள்ளது.<br><br>02 கோவைகள் நி.பி 109 இன் கீழ் நட்டங்கள் மற்றும் சேதங்களை பதிவழிப்பதற்காக அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள அமைச்சிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.<br><br>எஞ்சிய 08 கோவைகள் மிகவும் பழமையான கோவைகளாவதுடன், அவை தொடர்பில் தகவல்களை தேடிக் கண்டறிய முடியாமையால் குழுவொன்று நியமிக்கப்பட்டு மேலதிக நடவடிக்கைகளை எடுக்க பணிகள் முன்னெடுக்கப்பட்டவாறு உள்ளது. |
| (இ) | அம்பலந்தோட்ட பிரதேச செயலகத்திற்குரிய கெப் வண்டியொன்று 2015 சனவரி 01 ஆந் திகதி விபத்துக்குள்ளாகியிருந்தது . அந்த சந்தர்ப்பத்தில் வாகனத்தில் பயணஞ்செய்த பிரதேச செயலாளரினால் வழங்கப்பட்ட அறிவுரைகளின் அடிப்படையில் சாரதி செயற்பட்டிருந்தார். விபத்துக்குரிய நிதிப்பிரமாணம் 104(4) இன் பிரகாரம் இறுதி விசாரணை அறிக்கையின் பிரகாரம் நட்டம் | விசாரணை அறிக்கையின் பரிந்துரைகளின் பிரகாரம் நட்டத்திற்கு பொறுப்புக்கூற வேண்டிய அனைத்து உத்தியோகத் தர்கள் தொடர்பிலும் மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | முழுமையான நட்டத்தில் காப்புறுதி கம்பனியிடமிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய தொகையை கழித்து அரசினால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 52,337 ஆன நட்டத்தினை பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. சாரதியினால் உள்நாட்டலுவல்கள் செயலாளரிற்கு மேன்முறையீடொன்று முன்வைக்கப்பட்டுள்ளமையால், அதற்கு அமைச்சினால் தீர்மானமொன்றினை வழங்கும் வரையிலும் இது வரையிலும் |

| | | |
|---|---|---|
| தொடர்பில் சாரதி மற்றும் செயலாளர் பொறுப்புக் கூற வேண்டும் என பரிந்துரை வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், பரிந்துரைக்கப்பட்ட நட்டமான ரூபா 397,869 தொகை மற்றும் 25 சதவீதமான திணைக்களக் கட்டணமாக ரூபா 99,468 தொகையும் உள்ளடங்கலாக ரூபா 497,337 ஆன முழுமையான நட்டம் கெப் வண்டியின் சாரதியிடமிருந்து அறவிடுவதற்கு பரிந்துரைக்கப்பட்டிருந்தது. 2019 யூலை மாதம் வரையிலும், அந்த நட்டம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | | அறவிடல்கள் இடம்பெற்றிருக்கவில்லை. |

### 3.10 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கெக்கிரிபட நீர்த்தேக்கத்தினை நிர்மாணிப்பதற்குரிய மூன்றாம் கட்டத்தின் கீழ் கைப்பற்றப்பட்டிருந்த 36 காணித் துண்டுகளுக்காக நட்டஈட்டு செலுத்துத்துவதற்கான மதிப்பீட்டு அறிக்கை பெறப்பட வேண்டியதாக இருந்தது. 2014 சனவரி 28 ஆந் திகதி முதல் 2017 ஆகஸ்ட் 09 ஆந் திகதி வரையான காலப்பகுதியினுள் விலை மதிப்பீட்டுத் திணைக்களத்திடமிருந்து அந்த காணித்துண்டுகளின் மதிப்பீட்டு அறிக்கைகள் கோரப்பட்டிருந்த போதிலும், 2019 பெப்ரவரி 20 ஆந் திகதி வரையிலும் அந்த காணித் துண்டுகளுக்காக மதிப்பீட்டு அறிக்கைகள் பெற்றுக்கொள்ளத் தவறியிருந்தது. | காணித் துண்டுகளுக்காக நட்டஈட்டினை வழங்குதல் துரிதப்படுத்தவதற்காக விலை மதிப்பீட்டுத் திணைக்களத்துடன் கலந்துரையாடி மதிப்பீட்டு அறிக்கைகளை பெற்றுக்கொள்ள துரித நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | முதலாம் கட்டத்தின் கீழ் காணிகளை சுவீகரிக்கும் போது அத்துமீறிய காணிகளுக்காக அத்துமீறிய நட்டஈடு செலுத்துவதற்கு வழங்கப்பட்டிருந்த விசேட அமைச்சரவை அங்கீகாரம் மூன்றாம் கட்டத்திற்காகவும் உள்ளடக்கப்படுவதற்கான கடிதம் மற்றும் குறித்த காணி உரிமையாளர்களின் பெயர்ப்பட்டியல் விலைமதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ள போதிலும் விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தால் அது தொடர்பில் இது வரையிலும் பதில் வழங்கப்படவில்லை. |

## 4. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஐக்கிய நாடுகள் சபையின் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் 2030 இன் பிரகாரம் அடையப்பட வேண்டிய நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அடையும் முன்னாயத்தம் தொடர்பில் பரீட்சிக்கும் போது மாவட்ட செயலகத்தினால் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை இனங்காணுவதற்கு தேவையான திட்டங்களை தயாரித்தல், அந்த இலக்குகளை அடைவதனை அளவிடக்கூடிய குறிகாட்டிகள் மற்றும் அடைவுகள் இனங்காணுவதற்கு 2018 ஆம் ஆண்டினுள் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலைலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை இனங்காணுவதற்கு தேவையான திட்டங்களை தயாரித்து அவற்றை அடைவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவித்திருக்கவில்லை. |

## 5. நல்லாளுகை

### 5.1 பொதுமக்களுக்கு சேவைகளை நிறைவேற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது எல்லா பிரிவுகளுக்கும் பிரிந்து செல்லும் வகையில் செயற்திட்டங்களை அங்கீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும், பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட வளஸ்முல்ல பிரதேச செயலகப் பிரிவின் 53 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் 18 இற்கு எவ்வித அபிவிருத்தி செயற்திட்டமும் 2018 ஆம் ஆண்டிற்காக அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | பிரதேச செயலகப் பிரிவின் அனைத்து தொகுதிகளுக்கும் அபிவிருத்தி செயற்திட்டங்களின் மூலம் நலங்கள் பகிர்ந்து செல்லும் வகையில் செயற்திட்டங்களை அங்கீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | 53 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்காக 2018 ஆம் ஆண்டின் போது இனங்காணப்பட்ட செயற்திட்டங்கள் தொடர்பில் உத்தியோகத்தர்களின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்த போதிலும், அவற்றுள் சில செயற்திட்டங்களுக்காக மாத்திரம் அங்கீகாரம் கிடைத்துள்ளது. |

**5.2 உள்ளகக் கணக்காய்வு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அனைத்து பிரதேச செயலகப் பிரிவுகளிலும் தாபிக்கப்பட்ட கிராம சக்தி மக்கள் சங்கங்களுக்கான உள்ளக கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | கிராத சக்தி மதியுரை பத்திரம் 2018-(3) இலக்கமுடைய 2018 யூலை 12 ஆந் திகதிய பத்திரத்தின் பிரகாரம் கிராம சக்தி மக்கள் சங்கத்திற்கான உள்ளக கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டியமை. | கிராம சக்தி சங்கங்களின் உள்ளக கணக்காய்விற்காக கணக்காய்வு குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளதுடன், தாய் சங்கத்தின் கொடுக்கல் வாங்கல்களின் போது உரிய ஆவணங்கள் மற்றும் கணக்கீட்டு நடைமுறை சனாதிபதி செயலகத்தினால் இது வரையிலும் வழங்கப்படாமையால் உள்ளக கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. |

**6. மனிதவள முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாவட்ட செயலகத்தில் மற்றும் பிரதேச செயலகங்களில் பதவியணியிலான வெற்றிடடங்கள் 82 இனை நிரப்புவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.<br>மிகைப் பதவியணி 22 பேராக காணப்பட்ட போதிலும், அதற்கான அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதவியணியின் வெற்றிடடங்கள் மற்றும் மிகைகளை ததவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | ஒட்டுமொத்தமான கொள்ளும் போது வெற்றிடங்கள் மாத்திரமே நிலவுகின்றன. மிகையாக காண்பிப்பதற்கு நேர்வது குறித்த தரத்திற்கு அதிகளவான எண்ணிக்கையானது அந்த தரத்தில் காணப்படல் ஆகும்.<br><br>வெற்றிடங்கள் தொடர்பில் ஒவ்வொரு ஆண்டும் அரச நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சிற்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளுதுடன், புதிய உத்தியோகத்தர்கள் கிடைத்தன் பின்னர் |

வெற்றிடங்கள் நிரப்புவதற்கு
நடவடிக்கை எடுக்கப்படும்.